செ.வெ.எண்: 154/2020 நாள்: 16.03.2020

# செய்யார் மற்றும் திருவண்ணாமலையில் நடைபெற்ற மக்கள் குறைதீர்வு நாள் கூட்டத்தில் பொதுமக்களிடமிருந்து 2020 கோரிக்கை மனுக்கள் பெறப்பட்டது...

திருவண்ணாமலை மாவட்டத்தில் இன்று (16.03.2020) செய்யார் வருவாய் கோட்டாட்சியர் அலுவலகத்தில் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. க. சு. கந்தசாமி, இ.ஆ.ப. அவர்கள் தலைமையில் நடைபெற்ற மக்கள் குறைதீர்வு நாள் கூட்டத்தில் பொது மக்களிடமிருந்தும், மாற்றுத்திறனாளிகளிடமிருந்தும் மொத்தம் 1301 மனுக்களும், திருவண்ணாமலை மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் மாவட்ட வருவாய் அலுவலர் திரு. பொ. இரத்தினசாமி அவர்கள் தலைமையில் நடைபெற்ற மக்கள் குறைதீர்வு நாள் கூட்டத்தில் பொது மக்களிடமிருந்தும், மாற்றுத்திறனாளிகளிடமிருந்தும் மொத்தம் 719 மனுக்களும், பெற்றுக்கொண்டார்கள்.

செய்யார் வருவாய் கோட்டாட்சியர் அலுவலகம் மற்றும் திருவண்ணாமலை மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திலும் நடைபெற்ற மக்கள் குறைதீர்வு நாள் கூட்டத்தில் கல்வி உதவித்தொகை, வங்கிக் கடனுதவி, திருமண உதவித்தொகை, முதியோர் உதவித்தொகை, வீட்டுமனைப்பட்டா, சாதிச்சான்று, வேலைவாய்ப்பு, விதவை உதவித்தொகை, மாற்றுத்திறனாளிகளுக்கான உதவித்தொகை, உபகரணங்கள் உட்பட பல்வேறு கோரிக்கைகள் வலியுறுத்தி மொத்தம் 2020 கோரிக்கை மனுக்கள் பெறப்பட்டது. பொதுமக்கள் மற்றும் மாற்றுத்திறனாளிகளிடமிருந்து பெறப்பட்ட கோரிக்கை மனுக்களை சம்மந்தப்பட்ட துறை அலுவலர்களிடம் மாவட்ட ஆட்சியர் மற்றும் மாவட்ட வருவாய் அலுவலர் வழங்கி, உடனடி நடவடிக்கை மேற்கொள்ள உத்திரவிட்டார்கள். மேலும், நிலுவையிலுள்ள மனுக்களின் தொடர் நடவடிக்கைகள் குறித்தும் சம்மந்தப்பட்ட துறை அலுவலர்களிடம் விரிவான ஆய்வு மேற்கொண்டார்கள்.

செய்யார் வருவாய் கோட்டாட்சியர் அலுவலகத்தில் நடைபெற்ற மக்கள் குறைதீர்வு நாள் கூட்டத்தில், மாற்றுத்திறனாளிகள் நலத் துறையின் மூலமாக மூளை வளர்ச்சி குன்றிய 8 நபர்களுக்கு தலா ரூ.1,500 வீதம் மாதாந்திர பராமரிப்பு உதவித் தொகை பெறுவதற்கான ஆணை, 3 நபர்களுக்கு தலா ரூ.4,000 மதிப்பீட்டில் காதொலி கருவி, 4 மாற்றுத்திறனாளிகளுக்கு தலா ரூ.5,000 மதிப்பீட்டில் சக்கர நாற்காலி, 3 நபர்களுக்கு தலா ரூ.7,000 மதிப்பீட்டில் மூன்று சக்கர நாற்காலிகளை மாவட்ட ஆட்சியர் அவர்கள் வழங்கினார். மேலும், 64 நபர்களுக்கு முதியோர் உதவித்தொகை பெறுவதற்கான ஆணை, 21 நபர்களுக்கு இலவச வீட்டுமனை பட்டா ஆணை, ஆகிய நலத்திட்ட உதவிகளை மாவட்ட ஆட்சியர் அவர்கள் வழங்கினார்.

திருவண்ணாமலை மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் நடைபெற்ற மக்கள் குறைதீர்வு நாள் கூட்டத்தில் மாவட்ட தாட்கோ அலுவலகம் மூலமாக இளைஞர்களுக்கான சுய வேலை வாய்ப்பு திட்டத்தின் கீழ் மல்லவாடி கிராமத்தை சேர்ந்த திரு. சின்னமணி த/பெ. காசி என்பவருக்கு (பழங்குடியினர்) ரூ.4.00 இலட்சம் மானியத்துடன் ரூ.10.07 இலட்சம் மதிப்பிலான டூரிஸ்ட் கார், அய்யாம்பாளையம் கிராமத்தை சேர்ந்த பிரதாப் த/பெ. மாரியப்பன் என்பவருக்கு (ஆதிதிராவிடர்) ரூ.2.25 இலட்சம் மானியத்துடன் ரூ.9.27 இலட்சம் மதிப்பிலான டூரிஸ்ட் கார், சமூக பாதுகாப்பு திட்டத்தின் கீழ் ஒரு நபருக்கு இந்திரா காந்தி தேசிய முதியோர் உதவித்தொகை மாதம் ரூ.1,000 பெறுவதற்கான ஆணை, 1 நபருக்கு இயலாமை ஓய்வூதியம் மாதாந்திர உதவித்தொகை ரூ.1,000 பெறுவதற்கான ஆணை, 1 நபருக்கு விதவை உதவித்தொகை மாதம் ரூ.1,000 பெறுவதற்கான ஆணை, 3 நபர்களுக்கு மாற்றுத்திறனாளிகளுக்கான உதவித்தொகை மாதம் ரூ.1,000 பெறுவதற்கான ஆணை, ஆகிய அரசு நலத்திட்ட உதவிகளை மாவட்ட வருவாய் அலுவலர் அவர்கள் வழங்கினார்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், மாவட்ட ஆட்சியரகம், திருவண்ணாமலை.**